# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

## உதவி அமர்வு நீதிமன்றம், பொள்ளாச்சி

| | | | |
|---|---|---|---|
| **அமர்வு வழக்கு எண்.** | **234/2023** | **அரசு தரப்பு** | **அ.சா. 7** |
| **பெயர்** | **அசோக்குமார்** | **தந்தை பெயர்** | **சுப்ரமணியம்** |
| **வயது** | **60** | **முகவரி** | **காமநாயக்கன்பாளையம்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 of 10th day of March 2026.

**( இன்று விசாரணைக்கு எதிரிகள் 1,2,3 ஆஜர். )**

**முதல் விசாரணை**

நான் தற்போது காமநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.04.2018 ம் தேதி நிலைய அலுவலில் இருந்தபோது காலை 11.30 மணிக்கு வால்பாறை மெயின்ரோடு பாபு ஸ்டோரை சேர்ந்த ஜோசப் மகன் லாலு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று வால்பாறை காவல் நிலைய குற்ற எண் 81/2017 சட்டப்பிரிவு 3 of TNPPDL Act and 294(b), 506(2) IPC படி முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா 2** ஆகும். பின்னர் முதல் தகவல் அறிக்கை அசலுடன் வாதியின் அசல் புகார் மனுவையும் இணைத்து கனம் வால்பாறை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் இதர நகல்களை உயரதிகாரிகளுக்கு அனுப்பி வழக்குக் கோப்பை காவல் ஆய்வாளர் திருமேனி வசம் ஒப்படைத்தேன். வழக்குக் கோப்பை

பெற்றுக்கொண்ட காவல் ஆய்வாளர் வாதி அடையாளம் காட்டிய சம்பவ இடத்தை அன்றைய தினமே 12.30 மணிக்கு சாட்சிகள் சண்முகம் மற்றும ஜியா ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் **அ.த.சா 3** ஆகும், மாதிரி வரைபடம் **அ.த.சா 4** ஆகும். பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் 13.00 மணிக்கு உடைந்து கிடந்த கண்ணாடி துண்டுகளையும், சிறிய கருங்கல் ஒன்றையும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா 5** ஆகும். கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை வால்பாறை நீதிமன்றத்திற்கு படிவம் 91 மூலம் அனுப்பி வைத்தார். படிவம் 91 **அ.த.சா 6** ஆகும். பின்னர் சாட்சிகள் லாலு, ஆண்டு ஜோசப், ஜேசு நாதன், ரமேஷ், ஜியா, சண்முகம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்ததால் வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான சௌந்தரபாண்டியன், செந்தில் குமார், அருண்குமார் ஆகியோரை தேடிச் சென்றபோது கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் 05.04.2018 ம் தேதி 14.45 மணிக்கு ஸ்டேன்மோர் சந்திப்பு அருகே நின்று கொண்டிருந்த எதிரிகள் செந்தில் குமார் மற்றும் அருண்குமார் ஆகியோர்களை கைதிற்கான காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். 1ம் எதிரி உயர் நீதிமன்றத்தில் முன் ஜாமின் பெற்றுள்ளார். பின்னர் வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது 3 of TNPPDL Act and 294(b), 506(2) IPC ன் படி 03.06.2018 ம் தேதி குற்ற இறுதி அறிக்கையை காவல் ஆய்வாளர் தாக்கல் செய்தார்.

**குறுக்கு விசாரணை**

சொன்ன சமயத்தில் சொன்ன நேரத்தில் புகார் பெறப்பட்டு வழக்கு பதிவுசெய்யப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட சான்று பொருள்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கானது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக போடப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி